இலக்கியத் தோட்டம் தந்த திருப்பிரசாந்தன் உரை !

Written by -ஞானக்கவி தேசபாரதி தீவகம் வே.இராசலிங்கம் -
Wednesday, 23 September 2020 01:08 - Last Updated Wednesday, 23 September 2020 01:36

கார்மேகம் கம்பன் என்கக்
கட்டியம் கூறி மண்ணில்;
ஓர் கவி உண்டோ இல்லை
ஓடிசியும் ஷெல்லி இன்னும்
பார்கவி சேக்ஸ்பியர்க்கும்
படைத்தோர் ராமாயணத்தின்
நேர்கவியோடு வைத்து
நிறுத்திட முடியாதையா !

இலக்கியத் தோட்டம் தோன்றி
எழிற்பிரசாந்தன்; பேரார்
முழக்கிய கம்பன் பாட்டு
முத்தமிழ்க் கீடு இல்லாப்
பழமறையாகும் வையப்
பட்டறைத் தேனார் பாக்கள்
இளம்புவி கொடுக்கும் என்றும்
இறப்பிலாக் கவிதை என்றார் !

கம்பனைக் கற்றேன் அந்நாள்
காட்டிய காண்டம் முற்றும்
கும்பிடக் கொடுத்த காதை
குவிந்தனள் போற்றும் சீதை
இந்திரசித்தே மைந்தன்

1 / 2

இலக்கியத் தோட்டம் தந்த திருப்பிரசாந்தன் உரை !

Written by -ஞானக்கவி தேசபாரதி தீவகம் வே.இராசலிங்கம் -
Wednesday, 23 September 2020 01:08 - Last Updated Wednesday, 23 September 2020 01:36

இராவணர்க் கென்ற போதும்
வந்ததே அறத்தின் சாயல்
வரலாறே சொல்லும் காயல்!

பிரசாந்தன் முனைவர் என்ற
பேராதனைக்கோர் ஆயன்
குரலே செந் தமிழே என்றே
கோலோச்சும் அறிவின் நேயன்
அறமேயாம் கம்பன் பாட்டு
அழியாதே வையம் முற்றும்
நெறியாக நிற்கும் அன்றோ
நீள்நிலம் வரைக்கும் என்றார்!

vela.rajalingam@gmail.com

2 / 2